1994 மே 2] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

நண்பகல் 12-00

சிறப்பு முகாம் என்பது வேறு; சிறைச்சாலைகள் என்பது வேறு. இரண்டிற்கும் வித்தியாசம் தெரியாமல், இந்த முகாம்களில் நடைபெறும் சம்பவங்களை சிறைச்சாலைகளில் நடைபெறும் சம்பவங்களுடன் இணைத்துப் பேசுவது சரியாக இருக்காது என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான எனது பதிலுரையில் இது குறித்து விவரமாகக் குறிப்பிட்டு இருந்தேன். சிறப்பு முகாமில் தொடர்ந்து 3 ஆண்டுகாலமாக இலங்கை அகதிகள் இருந்து வருகின்ற காரணத்தினாலும், உடனடியாக, தாயகம் செல்ல இயலவில்லையே என்ற ஆதங்கத்தினாலும் வெறுப்பு, அடைந்து சில நேரங்களில் தப்பிச் செல்கின்ற முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இத்தகைய சூழ்நிலை ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுங்கள் என்று மத்திய அரசைப் பல முறை வற்புறுத்தி வந்து உள்ளோம். தமிழக அரசின் எல்லாக் கோரிக்கைகளையும் விரைவில் மத்திய அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தச் சம்பவத்தையொட்டி வேலூரில் எந்தவிதமான பதட்டமான சூழ்நிலையும் நிலவவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சம்பவத்தில் சந்தேகப்படும் நபர்களை காவல் துறையினர் ஏற்கெனவே கைது செய்து மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. விதி 110—ன் கீழ் தொழில் துறை அமைச்சரின் அறிக்கை

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் பேரவையில் ஓர் அறிக்கையினை வைத்திட மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையினை இப்போது அவர் பேரவைக்கு வைக்கலாம்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் பேரவையில் ஓர் அறிக்கை வைக்க அனுமதி கோரி இருந்தேன். நீங்கள் அனுமதி அளித்து இருக்கிறீர்கள்.

[திரு. ம. சின்னசாமி] [1994 மே 2

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டப் பிரிவு 18, உட்பிரிவு 1-ன் கீழ் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளான தொழிற் சங்கங்களுக்கும், சர்க்கரை ஆலை நிர்வாகத்தினரின் பிரதிநிதியாக தென்னிந்திய சர்க்கரை ஆலை சங்கத்தினுடைய தலைவர் மற்றும் சர்க்கரைத் துறை ஆணையர் ஆகியோர்க்கும் இடையில் 29.4.1994 அன்று சென்னையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதை தங்களின் கனிவான அனுமதியுடன் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களுக்கும் சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட முந்தைய ஒப்பந்தக் காலம், காலங்கடந்து 27.9.1993-ல் முடிவு பெற்றது. அண்ணா தொழிற்சங்கப் பேரவை, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், இந்திய தேசிய காங்கிரஸ் தொழிற்சங்கம், சி.ஐ.டி.யூ., எ.ஐ.டி.யூ.சி. முதலான பல்வேறு தொழிற்சங்கங்கள் அடிப்படைச் சம்பள உயர்வு, அகவிலைப்படி உயர்வு, சலவைப்படி உயர்வு, மருத்துவப்படி உயர்வு முதலான கோரிக்கைகள் அடங்கிய பட்டியல்களை சமர்ப்பித்தனர். இந்தக் கோரிக்கைகளின் மீது தொழிலாளர் நல ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தைகள் துவக்கினார். இதனைத் தொடர்ந்து தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மார்ச் 29 மற்றும் ஏப்ரல் 2, 7, 27 மற்றும் 29 ஆகிய நாட்களில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மாண்புமிகு தொழில்துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்களின் முன்பு நடந்த இறுதிப் பேச்சு வார்த்தையின் பலனாக தொழிற் தகராறு சட்டப் பிரிவு 18, உட்பிரிவு 1-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் கீழ்க்கண்ட ஷரத்துக்களுடன் முடிவானது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 முதல் ரூபாய் 410 வரை கீழ்க்கண்டவாறு கூடுதலாக ஊதியம் வழங்கப்பட ஒப்புக்கொள்ளப்பட்டது. தொழில் மற்றும் தொழில் திறனற்ற மற்றும் பகுதி திறனுள்ளவர்கள் அடிப்படைச் சம்பளம் ரூ 200; வீட்டு வாடகைப்படி ரூ. 32.50; சலவைப்படி ரூ. 30; மருத்துவப்படி ரூ. 62.50; மொத்தம் ரூ. 325.

பிற்பகல் 12-05

(2) 'ஏ' மற்றும் ' பி' தொழில் திறனுள்ளவர்கள் எழுத்தர் 3-வது மற்றும் 4-வது பிரிவு அடிப்படைச் சம்பளம் ரூ. 225; வீட்டு வாடகைப்படி ரூ. 32.50; சலவைப்படி ரூ. 30; மருத்துவப்படி ரூ. 62.50; மொத்தம் ரூ. 350.

(3) தொழில் உயர்திறனுள்ள தொழிலாளி மற்றும் மேற்பார்வைத் தொழிலாளர். (சி) அடிப்படைச் சம்பளம் ரூ. 255; வீட்டு வாடகைப்படி ரூ. 32.50; சலவைப்படி ரூ. 30; மருத்துவப்படி ரூ. 62.50; மொத்தம் ரூ. 380.

(4) மேற்பார்வைத் தொழிலாளர்கள் ' ஏ ' மற்றும் ' பி ' பிரிவு. அடிப்படைச் சம்பளம் ரூ. *285:* வீட்டு வாடகைப்படி ரூ. *32.50;* சலவைப்படி ரூ.*30;* மருத்துவப்படி ரூ. *62.50;* ஆக மொத்தம் ரூ. *410.*

1230 புள்ளிகளுக்கு மேலான இந்திய விலைவாசி நுகர்வோர் குறியீட்டு புள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரு. *2* வீதம் மாறுபடும் அகவிலைப்படி வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. அடிப்படைச் சம்பளத்தில் *5* விழுக்காடு பருவகால தொழிலாளர்களுக்கு உயர்வு. தொழிற் சாலைக்குள்ளே வேலை செய்யும் தினக்கூலி மற்றும் என்.எம்.ஆர். ஆகியவர்களுக்கு மட்டும் பணி ஊதியம் - ஆக்குபேஷனல் வேஜஸ் - வழங்கப்படும்.

1.10.1993-லிருந்து நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு, *10.5.1994*-க்குள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

31.3.1998 வரை இந்த ஒப்பந்தம் அமலில் இருக்கும். பல்வேறு சிரமங்களைத் தாங்கி கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளும், கடுமையாக உழைத்து உற்பத்தியைப் பெருக்குகிற தொழிலாளர்களும் சர்க்கரைத் துறையின் இரண்டு கண்கள். கரும்பு உற்பத்தியாளர்களே எதிர்பார்க்காத அளவு, அவர்கள் வியக்கும் வகையில், வரலாறு காணாத அளவுக்கு, கரும்பு விலையும் இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகப்படுத்தி கொடுத்தது, அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. விவசாயிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்த மேன்மையான பரிசு. தொழிலாளர்கள் உள்ளம் குளிரும் வகையில் ஊதிய உயர்வும், மற்ற சலுகைகளும் சுமார் *30,000* தொழிலாளர்களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கொடுத்த இந்தப் பரிசு (மேசையைத் தட்டும் ஒலி) மே தினப் பரிசாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) புயல் வெள்ளத்தால் சேதமடைந்த அம்பாசமுத்திரம் தொகுதி முண்டந்துறை பாலத்தைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ஆர். முருகையா பாண்டியன்.